# டிசம்பர் – 22 – சனி

## புனித பிரான்சிஸ் சேவியர் கப்பிரினி

**“ ஆண்டவரை என் உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது.” (லூக்.1:47)**

---

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 1 : 24 – 28

ஆந்நாட்களில் சாமுவேல் பால்குடி மறந்ததும், அன்னா அவனைத் தூக்கிக் கொண்டு மூன்று காளை, இருபது படி அளவுள்ள ஒரு மரக்கால் மாவு, ஒரு தோல்பை திராட்சை இரசம் ஆகியவற்றுடன் சீலோவிலிருந்து ஆண்டவரின் இல்லத்திற்கு வந்தார், அவன் இன்னும் சிறு பையனாகவே இருந்தான். அவர்கள் காளையைப் பலியிட்ட பின், பையனை ஏலியிடம் கொண்டு வந்தார்கள், பின் அவர் கூறியது ”என் தலைவரே! உம் மீது ஆணை! என் தலைவரே! உம்முன் நின்று ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டிருந்த பெண் நானே. இப்பையனுக்காகவே நான் வேண்டிக்கொண்டேன், நான் ஆண்டவரிடம் விண்ணப்பித்த என் வேண்டுகோளை அவர் கேட்டருளினார், ஆகவே நான் அவனை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறேன், அவன் தன் வாழ்நாள் அனைத்தும் ஆண்டவருக்கே அர்ப்பணிக்கப்பட்டவன், அங்கே அவர்கள் ஆண்டவரைத் தொழுதார்கள்.

**பதில்பாடல் :** என் மீட்பரான ஆண்டவரில் என் இதயம் மகிழ்கின்றது

## நற்செய்தி : லூக்கா 1 : 46 – 56

மரியா கூறியது ̇ 47 ”ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார் உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார் தாழ்நிலை யில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார். தம் ஊழியராகிய இஸ்ரயேலுக்குத் துணையாக இருந்து வருகிறார்”. மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்.

**தியானம்:** திருவருகைக்காலம் முழுவதும் ஆண்டவரின் வருகையை எதிர்நோக்கி அதற்காக மனமாற்றத்தை வலியுறுத்திச் சொல்லும் செய்தியே முதன்மை பெறுகிறது. ஆண்டவர் நமக்குச் செய்த அனைத்து நன்மைகளுக்கு நன்றி கூறி தம் பாடலைத் தொடங்கும் மரியா தம் முன்னோருக்கு இறைவன் செய்துள்ள நன்மைகளுக்காக நன்றி கூறி தம் பாடலை முடிக்கிறார். சுயநலமின்றி எலிசபெத் வீட்டில் பிறரன்புப் பணியை செய்யும் தனது அழைத்தலின் ஆழம் உணர்கிறார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்’’ என்று அகமகிழ்ந்து உரைக்கும் மரியா தனது பிறரன்பு சேவையின் போதே இத்தகைய பேறுவாழ்வை உணர்கிறார். தாழ்நிலையில் இருந்த தன்னை இறைவன் உயர்த்தியது போன்று சமூகத்தில் அநீதி இளைக்கப்பட்டவர்கள், ஏழைகள் வாழ்வில் இறைவன் ஏற்றுக்கொள்வார் என்பதை உணர்கிறார். ஏனெனில் தாழ்நிலை மாந்தரின் குறியீட்டாலே மரியா உள்ளார். தாய் மரியாவின் வார்தைக்கேற்ப நாமும் படைப்புக்களோடு, படைத்தவரோடு இணைந்து மரியாவைப் புகழ்வோம். அவளது பேறுபெற்ற நிலையை பாடுவோம். மரியாவைப் போற்றிப் புகழும் பொழுது நாமும் உயர்கிறோம். இறையருளை நிறையப் பெறுகிறோம்.